இடைத்தேர்தல் காட்டிய உண்மைகளும்

ஞானேஷ்குமாருக்கு ஊழியம் செய்யும் ஆதவ் அர்ஜுனாவும்!

இரண்டு தொகுதி இடைத்தேர்தல் முடிவுகள் வெளிவந்த அடுத்த நாள் காலையில் வெளிப்பட்ட இரண்டு காட்சிகள், அரசியல் மற்றும் ஊடகச் சீரழிவின் உச்சக்கட்டத்தைப் படம் பிடித்துக் காட்டின.

ஒன்று, இரண்டு தொகுதிகளிலும் த.வெ.க. வென்றதைத் தொடர்ந்து, தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வரின் அறையிலிருந்தே தனது அமைச்சரவை சகாக்களோடு முதல்வர் விஜய் எடுத்துக் கொண்ட குழுப் புகைப்படம். விஜய் தனது அரசியல் குருவான வி.எஸ்.பாபு செய்த அதே இழி சைகையைச் சட்டமன்றத்தில் செய்ததுபோலவே தலைமைச் செயலகத்திலும் செய்து அந்தப் படத்தை வெளியிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டை எத்தனையோ முதல்வர்கள் ஆண்டிருக்கிறார்கள்; ஆனால், எவருமே தலைமைச் செயலகத்திலிருந்து ஒரு தேர்தல் வெற்றியை இது போல கேவலமாகக் கொண்டாடிய தில்லை. தேர்தல் வெற்றிகள் எப்போதும் அந்தந்தக் கட்சி அலுவலகங்களில்தான் கொண்டாடப்படும். குதிரை பேரத்தில் கட்சி மாறுகிறவர்களுக்குத் தலைமைச் செயலகத்தில் வைத்து உறுப்பினர் அட்டை கொடுப்பதுபோலவே, இப்போது முதல்வரின் அறையிலிருந்தே இது போன்ற கொண்டாட்டப் படங்களையும் வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள். சட்ட மன்றத்தின் மாண்புகளைத் த.வெ.க. சீரழித்ததுபோலவே, இப்போது தலைமைச் செயலகத்தின் மாண்புகளையும் சீரழித்திருக்கிறது.

இரண்டாவதாக, **த.வெ.க. ஆதரவு ஊடகவியலாளர் இருவர், இடைத்தேர்தல் முடிவுகளைக் கேட்டு நேரலை அரங்கிலேயே (Studio) நடனமாடிய காணொளியைப் பலரும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து விமர்சித்திருந்தார்கள். த.வெ.க. ஆதரவு ஊடகங்கள் எந்த எல்லைக்கும் செல்லத் தயாராகிவிட்டன என்பதற்கு இதுவே சாட்சியம்.**

மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகள் பல உண்மைகளை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளன:

1. தி.மு.க.வின் வாக்கு வங்கி மாசற்றது: கடந்த சட்டமன்றத் தேர்தலில் உடனிருந்த பெரும்பாலான கூட்டணிக் கட்சிகள் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு த.வெ.க. பக்கம் சென்றுவிட்டபோதிலும், தி.மு.க. இந்த இடைத்தேர்தலில் தனது வாக்கு வங்கியை அப்படியே தக்கவைத்துக் கொண்டுள்ளது. "கூட்டணிக் கட்சிகளால் தான் தி.மு.க. வலிமையுடன் இருக்கிறது" என்று சொல்லப்பட்ட மாயை மட்டுமல்ல; இந்தக் கட்சிகள் ஒரு போலித் தோற்றத்தின் மூலம் தங்களை வலிமையான சக்தியாகக் காட்டிப் பேரம் பேசிவந்த மாயையும் உடைக்கப்பட்டிருக்கிறது.

2. செயற்கைப் பிம்பத்தின் வீழ்ச்சி: த.வெ.க. இந்த இடைத்தேர்தலைத் தனது அனைத்து ஆயுதங்களையும் பயன்படுத்திச் சந்தித்தது. அதிகார பலம், டிபன் பாக்சில் பணம், தி.மு.க.விடமிருந்து திருடப்பட்ட கூட்டணிக் கட்சிகள், விஜய் தெருத்தெருவாகத் தேநீர் குடித்தும் முருங்கைக்காய் பறித்தும் செய்த பிரச்சாரம் என அத்தனையும் இருந்தும், அவர்கள் எதிர்பார்த்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற முடியவில்லை. தி.மு.க. தலைவர் சொன்னது போல, 'பொய் பிம்ப அரசியலின் வீழ்ச்சி' தொடங்கிவிட்டது.

3. தி.மு.க.வின் களப்பணி: இந்த இரண்டு தொகுதி இடைத்தேர்தல்களிலும் தி.மு.க. நிர்வாகிகளும் தொண்டர்களும் அடிமட்டம் வரை ஆற்றிய களப்பணிகள், தி.மு.க.வே தமிழ்நாட்டின் முதன்மையான அரசியல் சக்தி என்பதை மீண்டும் நிரூபித்துள்ளன.

'தி.மு.க. போபியா'வும் ஆதவ் அர்ஜுனாவின் நாடகமும்

தேர்தல் முடிவுகள் வெளிவந்த அன்று மாலை, அமைச்சர் ஆதவ் அர்ஜுனா 'செய்தியாளர் சந்திப்பு' என்ற பெயரில் தனது வழக்கமான நாடகப் பிரசங்கம் ஒன்றை நிகழ்த்தினார். ஒரு பச்சைப் பொய்யை உண்மை போலக் காட்ட வேண்டுமென்றால், இந்த நாடக பாணி அவசியம்தானே!

அவரது தலைவருக்கு இருக்கும் 'தி.மு.க. போபியா' (DMK Phobia), அன்று ஆதவ் மூலமாக உச்சக்கட்டமாக வெளிப் பட்டதை அப்பட்டமாக உணர முடிந்தது. எந்தக் கூட்டணியின் பலமும் இல்லாமல் இடைத்தேர்தலில் தி.மு.க. பெற்ற தனிப் பெரும் வாக்கு வங்கி, அவர்களை எந்த அளவுக்குப் பதறவைத்திருக்கிறது என்பதற்கு இதுவே தெளிவான சான்று.

சிறப்பு தீவிர திருத்தப் பணி (SIR) மூலம் தமிழ்நாட்டில் சுமார் ஒரு கோடி வாக்குகள் நீக்கப்பட்டதுதான் தேர்தல் முடிவுகளுக்குக் காரணம் என்று கள ஆய்வுகள் அம்பலப்படுத்தி வருகின்றன. இந்த உண்மையை எதிர்கொள்ள முடியாமல், "தமிழ்நாட்டில் ஒரு கோடி வாக்குகள் நீக்கப்பட்டதற்கு தி.மு.க. அரசுதான் காரணம்" என்று ஒரு புதிய அறிவியல் கண்டுபிடிப்பை அறிவித்துக்கொண்டிருந்தார்.

அதாவது, 'எஸ்.ஐ.ஆர்.' மூலம் 'ஜென் ஸீ' (Gen Z) இளைஞர்களின் வாக்குகளைப் பெருமளவில் தி.மு.க. நீக்கி விட்டதாகவும், அதனால்தான் த.வெ.க. 160 தொகுதிகளில் வெற்றிபெறுவது தடுக்கப் பட்டுவிட்டது என்றும் அள்ளிவிட்டார்.

உண்மை இதற்கு நேர் எதிரானது. எஸ்.ஐ.ஆர். மூலம் அதிக வாக்குகள் நீக்கப்பட்ட தொகுதிகளில்தான் த.வெ.க. வெற்றிபெற்றுள்ளது; மிகக் குறைந்த அளவில் வாக்குகள் நீக்கப்பட்ட இடங்களில் அது படுதோல்வி அடைந்துள்ளது. இந்த எளிய முரண்பாட்டை அங்கே நின்ற எந்தவொரு ஊடகவியலாளரும் அவரிடம் எதிர்கேள்வியாக எழுப்பாதது ஏன்?

அடுத்ததாக, "மாநில அரசின் பொறுப்பில்தான் எஸ்.ஐ.ஆர். பணிகள் நடக்கின்றன; த.வெ.க.விற்கு எதிராக வாக்குகளை நீக்கத்தான் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு எஸ்.ஐ.ஆரைப் பயன்படுத்தியது" என்பது அடுத்த பொய்.

மாநில அரசுக்கோ அதன் அதிகாரிகளுக்கோ தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர். நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்டு என்றால், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி ஏன் தோற்க வேண்டும்? அவர்தான் எஸ்.ஐ.ஆரை எதிர்த்து மிகக் கடுமையாகப் போராடியவர் ஆயிற்றே!

மேலும், "தி.மு.க. அரசு எஸ்.ஐ.ஆர். பணிகளைச் செய்யமாட்டோம் என்று திட்டவட்டமாக மறுத்திருக்க வேண்டும்" என்றும் பேசியுள்ளார். மக்களாட்சி அமைப்போ, அரசியலமைப்புச் சட்டமோ என்னவென்றே தெரியாத ஒரு புலம்பல் இது.

ஒரு மாநில அரசு தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை "தேர்தல் ஆணையத்தின் பணிகளை (SIR உட்பட) செய்ய வேண்டாம்" என்று தன்னிச்சையாக உத்தரவிட அரசியலமைப்பு ரீதியாக அதிகாரம் கிடையாது. அவ்வாறு ஒரு மாநில அரசு உத்தரவிட்டால், அது நேரடியான அரசியலமைப்பு முடக்கம் மற்றும் நெருக்கடிக்கு (Constitutional Crisis) வழிவகுக்கும்.

1. அரசியலமைப்புப் பிரிவு 324 மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட மீறல்:

o **அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 324(6):** தேர்தல் ஆணையம் கோரும்போது, தேர்தல் பணிகளுக்குத் தேவையான மனிதவளம் மற்றும் அதிகாரிகளை மாநில ஆளுநர் அல்லது அரசு கட்டாயம் வழங்க வேண்டும் என அரசியலமைப்பு தெளிவாகக் குறிப்பிடுகிறது.

o **மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் (1950 பிரிவு 13CC / 1951 பிரிவு 28A):** தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அல்லது வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தொடங்கப்பட்டதும், அந்தப் பணியில் உள்ள மாநில அரசு அதிகாரிகள் தேர்தல் ஆணையத்தின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணிப் பிரதிநிதிகளாகவே (Deemed Deputation) கருதப்படுவார்கள்.

o எனவே, மாநில அரசின் உத்தரவை விடத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவே இங்கு மேலோங்கும் (Supremacy of ECI).

2. உச்ச நீதிமன்றத் தலையீடு மற்றும் நீதிமன்ற அவமதிப்பு:

o தேர்தல் ஆணையம் உடனடியாக உச்ச நீதிமன்றத்தை அணுகும்.

o நீதிமன்றம் மாநில அரசின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிப்பதுடன், உடனடியாகத் தேர்தல் பணிகளை மேற்கொள்ளுமாறு தலைமைச் செயலாளர் (Chief Secretary) உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்குக் கடுமையான உத்தரவுகளைப் பிறப்பிக்கும்.

o உத்தரவை மதிக்காத பட்சத்தில் மாநில அரசு மற்றும் உயர் அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (Contempt of Court) பாயும்.

3. அதிகாரிகள் மீதான நேரடி ஒழுங்கு நடவடிக்கை:



மனுஷ்ய புத்திரன்
மாநில ஆலோசகர்,
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

o மாநில அரசின் பேச்சைக் கேட்டுத் தேர்தல் பணியைப் புறக்கணிக்கும் தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு அல்லது அவர்களை உடனடியாகப் பணிநீக்கம்/பணியிட மாற்றம் செய்யுமாறு தேர்தல் ஆணையம் நேரடியாக உத்தரவிடும்.

o உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின்படி, இத்தகைய விவகாரங்களில் அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் அல்லது தற்காலிகப் பணிநீக்கம் செய்யும் அதிகாரவரம்பு தேர்தல் ஆணையத்திற்கு உண்டு.

4. தீவிர அரசியலமைப்பு விளைவு குடியரசுத் தலைவர் ஆட்சி (பிரிவு 356):

o ஒரு மாநில அரசு இந்திய அரசியலமைப்புக்கு உட்பட்டு இயங்க மறுத்தால் அல்லது மத்திய தேர்தல் ஆணையத்தின் சட்டப்பூர்வ உத்தரவுகளைத் திட்டமிட்டு முடக்கினால்:

பிரிவு 365: மத்திய அரசு அல்லது அரசியலமைப்பு ஆணையங்களின் உத்தரவுகளை ஒரு மாநில அரசு செயல்படுத்தத் தவறினால், அங்கு "அரசியலமைப்பு இயந்திரம் முறிந்துவிட்டது" (Breakdown of Constitutional Machinery) எனக் கருதப்படும்.

இதன் அடிப்படையில் ஆளுநர் அறிக்கை தாக்கல் செய்து, பிரிவு 356ன் கீழ் மாநில ஆட்சியைக் கலைத்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியை (President's Rule) அமல்படுத்த மத்திய அரசுக்கு அதிகாரம் உள்ளது.

5. தேர்தல் அல்லது பட்டியல் பணிகள் நிறுத்திவைக்கப்படலாம்:

o மாநில அரசின் ஒத்துழையாமையால் தேர்தல் பணிகளையோ அல்லது வாக்காளர் பட்டியல் திருத்தத்தையோ நேர்மையாக நடத்த முடியாது என்ற சூழல் ஏற்பட்டால், அந்த மாநிலத்தில் தேர்தல் நடைமுறைகளையே நிறுத்தி வைக்கும் அதிகார மும் தேர்தல் ஆணையத்திற்கு உண்டு. இது மாநிலத்தின் ஒட்டுமொத்த ஜனநாயக நிர்வாகத்தையும் முடக்கிவிடும்.

இவ்வளவு சிக்கல்கள் இருக்கும்போது, "மு.க. ஸ்டாலின் அரசு ஏன் எஸ்.ஐ.ஆரை நிறுத்திவைக்கவில்லை?" என ஆதவ் சவடால் அடிக்கிறார்.

எஸ்.ஐ.ஆரில் உள்ள உண்மையான தில்லைமுல்லு என்னவென்றால், தேர்தல் ஆணையம் 'படிவம் 6' மூலம் 25 ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணங்களையும் விவரங்களை யும் கேட்டு, பெரும்பான்மை மக்கள் பதிலளிக்க முடியாதவாறு தடுத்துதான். அரசுப் பணியாளர்கள் தேர்தல் ஆணையம் வழங்கும் படிவத்தில் உள்ளபடிதான் செயல்பட முடியும்; பெயர்களை அவர்களாகவே சேர்க்கவோ நீக்கவோ முடியாது.

புதிய வாக்காளரைச் சேர்ப்பதற்கு தாத்தா, பாட்டி, அப்பா, அம்மாவின் வாக்காளர் வரிசை எண் கேட்பதில் தொடங்கி, வாக்காளர்களின் முந்தைய வாக்குச்சாவடி எண், வரிசை எண் பதிவிட நிர்பந்திப்பது வரை ஒருவர் தன் வாக்குரிமையை இழப்பதற்கான அத்தனை தந்திரங்களும் அதில் செய்யப்பட்டன. அரசு ஊழியர்களுக்குப் படிவம் 6ல் கேட்டபடி அதை நிரப்புவதுதான் பணியே தவிர, பெயர்களை நீக்கவோ சேர்க்கவோ அதிகாரம் இல்லை.

தங்கள் வாக்குரிமையை இழந்த எத்தனை பேர் இதை எதிர்த்து நீதிமன்றம் செல்ல முடியும்? அப்படியே வாக்காளர் பெயர் நீக்கத்தை எதிர்த்து மேல்முறையீடு செய்தாலும், தேர்தல் ஆணையம் தனது மையப்படுத்தப்பட்ட அமைப்பின் மூலம் திட்டமிட்டு அவற்றை ஏதேச்சதிகாரமாக நிராகரித்தது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள், முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர்கள், அரசியல் ஆய்வாளர்கள், மாணவர்கள் மற்றும் இந்தியாவின் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகள் என அனைவரும் கொதித்தெழுந்து நிற்பது இந்தப் பிரச்சனைக்கு எதிராகத்தான்.

எஸ்.ஐ.ஆரின் பின்னணியும் பிரணாய் ராயின் தரவுகளும்

DeKoder தளத்தில் பிரபல ஊடவியலாளர் பிரணாய் ராய் (Prannoy Roy) வெளியிட்டுள்ள "More SIR Deletions, Bigger BJP Swing? Prannoy Roy DeKodes the Data" என்ற காணொளியில் பல சந்தேகங்களையும் கேள்விகளையும் முன் வைக்கிறார்.

இந்தியத் தேர்தல் ஆணையம் மேற் கொண்ட வாக்காளர் பட்டியலின் சிறப்பு தீவிர திருத்தப் பணி (SIR) மிகவும் சிக்கலானது; இதற்கு குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளாவது தேவைப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மாநிலத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு அவசர அவசரமாக இந்தப் பணி மேற்கொள்ளப் பட்டது ஏன் என்ற கேள்வியை அவர் எழுப்புகிறார். மேலும், தேர்தல் ஆணையத்தின் இந்த நடவடிக்கை யால் நாடு முழுவதும் லட்சக்கணக்கான தகுதியுள்ள வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, பிரணாய் ராய் தான் பல தசாப்தங்களாக வாக்களித்து வந்தபோதிலும், அவருடைய பெயரும் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கிறார்.

அவரது காணொளியில் உள்ள முதன்மையான தரவுகள்:

• டெல்லியில் சுமார் 33%, மகாராஷ்டிராவில் சுமார் 21%, கர்நாடகாவில் சுமார் 20% வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

• மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்குச் சாதகமாகச் சுமார் 8% வாக்குகள் அதிகரித்ததும், திரிணாமூல் காங்கிரஸுக்கு (TMC) 7% வாக்குகள் குறைந்ததும் தெரியவந்துள்ளது.

• வாக்காளர்கள் நீக்கப்பட்ட விகிதத்திற்கும் பா.ஜ.க. வாக்குகள் அதிகரித்த தற்கும் நேரடித் தொடர்பு இருப்பதாகத் தரவுகள் காட்டுகின்றன.

• அதிக வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதிகளில் TMCக்கு எதிரான வாக்குப் பின்னடைவு 10.5% ஆக இருந்தது; குறைந்த வாக்காளர் நீக்கம் நிகழ்ந்த 25 தொகுதிகளில் அந்தப் பின்னடைவு 5.3% மட்டுமே. அதாவது, வாக்காளர்கள் அதிகமாக நீக்கப்பட்ட தொகுதிகளில் வாக்குப் பின்னடைவு கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரித்துள்ளது.

• பொதுவாக மம்தா பானர்ஜி மற்றும் திரிணாமூல் காங்கிரஸுக்கு பெண்களிடையே பாஜகவை விட 13% வரை அதிக ஆதரவு இருந்துவந்துள்ளது. ஆனால், மேற்கு வங்கத்தில் ஆண்பெண் வாக்காளர் விகிதம் 50:50 என்ற அளவில் உள்ளபோதும், நீக்கப்பட்ட மொத்த வாக்காளர்களில் 62% பேர் பெண்கள், ஆண்கள் 38% மட்டுமே.

• முஸ்லிம் வாக்காளர்களில் 75% பேர் TMCக்கும், 7 முதல் 8% பேர் மட்டுமே பா.ஜ.க.வுக்கும் ஆதரவளித்துவந்துள்ளனர். தேர்தல் முடிவை மாற்றக்கூடிய அளவில் அதிக முஸ்லிம் வாக்காளர்களைக் கொண்ட தொகுதிகளிலேயே அதிகப்படியான நீக்கங்கள் நடந்துள்ளன.

• மற்ற வாக்காளர்களின் விகிதத்திலேயே நீக்கப்பட்டிருந்தால் முஸ்லிம் வாக்காளர்கள் 19.8 லட்சம் பேர் மட்டுமே நீக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் உண்மையில் 30 லட்சம் முஸ்லிம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர் (சுமார் 52% கூடுதல் நீக்கம்).

பாலினம் மற்றும் மதம் சார்ந்த இந்தப் பெரும் சமநிலையின்மை மற்றும் முறையான நீக்கங்கள் குறித்துத் தேர்தல் ஆணையம் நாட்டு மக்களுக்கு வெளிப்படையான விளக்கம் அளிக்க வேண்டும் என்றும், முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ். ஒய். குரேஷி (S.Y. Quraishi) கூட இதற்கான விளக்கத்தைக் கோரியுள்ளார் என்றும் பிரணாய் ராய் பல கேள்விகளை எழுப்புகிறார்.

இந்தக் கேள்விகள் அனைத்தும் தமிழ் நாட்டிற்கும் மிகவும் பொருந்தும்.

ஆதவ் அர்ஜுனாவின் அறியாமையும் தி.மு.க.வின் களப்பணியும்

எஸ்.ஐ.ஆர். வாக்காளர் நீக்கத்திற்குத் தி.மு.க.தான் காரணம் என்று ஆதவ் அர்ஜுனா கூசாமல் சொல்வதற்குப் பின்னால் உச்சக்கட்ட காழ்ப்புணர்ச்சியும் அறியாமையும் மட்டுமே காரணம் அல்ல; தனக்கு மறைமுகமாக உதவிய தேர்தல் ஆணையத்திற்குச் செய்யும் கைம்மாறு அது. நாடே இந்தப் பிரச்சினையில் தலைமைத் தேர்தல் ஆணையருக்குஎதிராக கிளர்ந்து எழுந்து கொண்டிருக்கும்போது ஞானேஷ் குமார் மீதான பழியை தி.மு.க மீது திருப்புவது என்றால் ஆதவ் அர்ஜுனா யாருடைய ஆள் என்பது தெட்டத் தெளிவாக தெரிகிறது. மேலும் இத்தனை தில்லைமுல்லுகளுக்குப் பிறகும் தி.மு.க. கம்பீரமாக எழுந்து நிற்பதைப் பார்த்து உண்டான நடுக்கம் அது.

தமிழ்நாட்டில் 96 லட்சம் வாக்குகள் நீக்கப்பட்ட சூழலில், தி.மு.க. எடுத்த தொடர் சட்ட மற்றும் களப் போராட்டங்களால்தான் அதில் 20 லட்சம் வாக்குகள் மீண்டும் சேர்க்கப்பட்டன. இந்த எஸ்.ஐ.ஆர். நடைமுறை நடந்துகொண்டிருந்தபோது, அதற்கு எதிராகத் த.வெ.க. ஒரு சிறு துரும்பையாவது கிள்ளிப் போட்டதுண்டா?

தேர்தல் ஆணையத்தின் இந்த மோசடிக்கு மௌனமாகத் துணைநின்று அரசியல் ஆதாயம் தேடிக்கொண்டவர்கள், இப்போது ஒட்டுமொத்தப் பழியையும் தி.மு.க. மீது சுமத்துகிறார்கள். தங்களுக்குக் களத்தில் எந்தத் தனிப்பெரும் செல்வாக்கும் இல்லை என்பதை உணர்ந்துவிட்டதால் தான், இத்தகைய எஸ்.ஐ.ஆர். பழியைத் தி.மு.க. மீது போடும் நாடகங்களை அரங்கேற்றி வருகிறார்கள்.

"வெளியே இருந்து வந்தவன் எல்லாம் இதுபற்றி முட்டாள்தனமாகப் பேசுறான்" என அகில உலக மேதை ஆதவ் அர்ஜுனா தாக்குவது திரைக் கலைஞர் பிரகாஷ் ராஜை. மேலும், இவர்களது கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த திருமாவளவன் கூட அண்மையில், "த.வெ.க. வெற்றிக்கு எஸ்.ஐ.ஆர்தான் காரணம்" என்று சொல்லியிருப்பதற்கும் ஆதவ் அர்ஜுனாவின் பதில் இதுதானா?

பா.ஜ.கவின் முகமூடியாக தமிழகத்தில் தேர்தல் ஆணைய மோசடியால் ஆட்சியிலிருக்கும் த.வெ.க இப்படிப் பேசாவிட்டால் தான் ஆச்சரியம். தமிழ்நாட்டிலிருக்கும் பா.ஜ.க.தான் த.வெ.க.